செ.வெ.எண் :28/மார்ச்                                                                                    நாள்:20.03.2020

**இராமநாதபுரம் மாவட்டம்**

**கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கையாக அனைத்து குறைதீர்க்கும் கூட்டங்களும் 31.03.2020 வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ் இ.ஆ.ப. அவர்கள் தகவல்.**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில், திங்கட்கிழமை தோறும் நடத்தப்படும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாதந்தோறும் நடைபெறும் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், கிராமப்புறப்பகுதிகளில் நடத்தப்படும் மக்கள் தொடர்பு முகாம்கள், வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் அம்மா திட்ட முகாம்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் செயல்பட்டு வரும் ஆதார் மையம் மற்றும் பொது சேவை மையங்கள் போன்றவை கொரோனா வைரஸ் முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கை காரணமாக பொதுமக்கள் கூடுவதை தவிர்த்திட 31.03.2020 வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகிறது.

எனவே, பொதுமக்கள் தங்கள் கோரிக்கை தொடர்பான மனுக்களை மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறும் அரங்கில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுமாறும், அவசரமான கோரிக்கை ஏதுமிருப்பின் அதுகுறித்த விவரங்கள் collrrmd@nic.in மின்னஞ்சல் முகவரிக்கோ 04567-230056 என்ற கட்டணமில்லா தொலைபேசி மூலமாகவோ அலுவலர்களை தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**